(3) தகவல் கோரல்:

(அ) சென்னை நகரில் சாலை விபத்துக்கள்.

திரு. மு. அம்பிகாபதி : தலைவர் அவர்களே, நேற்று நம்முடைய சட்டப்பேரவை உறுப்பினர் சுந்தரமூர்த்தி அவர்கள் மிகப்பெரிய விபத்தில் இருந்து தப்பி இருக்கிறார். அவர் சென்ற ஆட்டோவை பின்னாலே இருந்து வந்த ஒரு லாரி இடித்து அந்த ஆட்டோ முன்னாலே போன டாங்கரில் மோதி இருக்கின்றது. அவர் தப்பி இருக்கிறார். சென்னை நகரில் இப்படி விரிவான விபத்துக்கள் நடப்பது வாடிக்கை ஆகிவிட்டது. அதைப்பற்றி விவாதிக்க ஒரு மணி நேரம் ஒதுக்கித் தர இயலுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நேரம் ஒதுக்கித் தரலாம், ஆனால் இப்போது அதற்கு நேரம் இல்லை.

(ஆ) வடபழனி கோயில் நிலம் விற்பனை.

திரு. ப. பொன்னுரங்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வடபழனி கோயிலுக்குச் சொந்தமான 216 கிரவுண்டு நிலத்தை அநியாயமாக விற்பனை செய்து கோடிக்கணக்கான ரூபாய் அரசாங்கத்திற்கு நட்டம் ஏற்படுகின்றது.........

மாண்புமிகு பேரவைத் தலைவர் : சர்க்காருக்கு நஷ்டம் என்றால் ஒத்திவைப்புத் தீர்மானமாகக் கொண்டு வாருங்கள். (குறுக்கீடு) கொடுத்திருந்தால் பார்க்கலாம். (குறுக்கீடு) இப்போது நான் திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த உறுப்பினர் திரு என். வி. என். சோமு அவர்கள் கொடுத்த ஒத்திவைப்புத் தீர்மானத்தை எடுத்துக் கொள்வதாக இருக்கிறேன். உறுப்பினர்கள் ஒத்துழைப்புத் தரவேண்டும். (குறுக்கீடு) என்னுடைய அலுவலகம் அனைத்தையும் கவனிக்கும். அந்த அலுவலகத்தை வேலை செய்வதற்கு நீங்கள் விடவேண்டும். அமைதியாக இருந்தால் ஒவ்வொருநாளும் ஒரு ஒத்திவைப்புத் தீர்மானம் எடுத்துக்கொள்ளப்படும்.

(இ) பார்வையாளர் மாடத்திலிருந்து கோஷமிட்டவருக்குத் தண்டனை.

திரு. சு. பாலன் : மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களே, நேற்று மாலையிலே பால் வழங்கும் மானியக் கோரிக்கையின்மீது மாண்புமிகு உறுப்பினர் ரகுமான்கான்

அவர்கள் பேசுகிறபோது, பார்வையாளர் மாடத்தில் இருந்து யாரோ ஒருவர் ஒழிக, வாழ்க எனக் கோஷமிட்டது கேட்டது. தங்கள் மூலம் அவருக்கு அளிக்கப்பட்ட தண்டனை என்ன என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : சபை முடியும் வரை அவரைக் காவலில் வைத்திருந்து பின்னர் விட்டுவிட்டோம்.

திரு. ப. பொன்னுரங்கம் : அந்த முடிவினை பேரவை தான் எடுத்திருக்க வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நானும் எடுக்கலாம். எனக்கு இருக்கின்ற உரிமையை விட்டுக் கொடுக்க நான் தயாராக இல்லை. ஒவ்வொருவரும் அவரவர்களுடைய கட்சிக்காரர்கள் என்கிறபோது சமாதானத்திற்கு வருகிறார்கள். வெளியார் என்கிறபோது வேறுவிதமாகப் பேசுகிறார்கள். பொதுவான நீதி எல்லோருக்கும் வழங்கப்படும். அது வழங்கப்பட்டாகி விட்டது.

4. ஒத்திவைப்புத் தீர்மானம்.

சென்னை மத்திய சிறையில் சந்தேகப்படக்கூடிய முறையில் ஒருவர் இறந்துள்ளது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திருவாளர்கள் என். வி. என். சோமு, ரா. கிருஷ்ணன், என். வரதராஜன், எம். செல்லமுத்து, மு. அம்பிகாபதி, செ. சிவசாமி, செ. இராமலிங்கம், ஆர். நவநீதகிருஷ்ண பாண்டியன். என். எஸ். வி. சித்தன், கே. எம். தங்கமணி, என் பழனிவேல், சி. பழனிமுத்து, ஆகியோர் 'சென்னை மத்திய சிறையில் 17—3—1982 அன்று மணி என்ற ஜிஞ்ஜர் மணி என்பவர் சந்தேகப்படக்கூடிய முறையில் இறந்தது குறித்து விவாதிக்கப் பேரவையின் இதர அலுவல்களை ஒத்திவைக்கவேண்டும்' என்ற தீர்மானத்தை மொழிய என் அனுமதி கேட்டு அறிவிப்புகள் கொடுத்துள்ளனர். இது எப்படி அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்தது என்பதைக் குறித்து மிகச் சுருக்கமாகக் கூறும்படி கேட்டுக் கொள்கிறேன். திரு. என். வி. என். சோமு.

திரு. என். வி. என். சோமு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மணி என்கிற ஜிஞ்ஜர் மணி 17—3—1982 அன்று சென்னை மத்திய சிறையில் மரணம் அடைந்து விட்டார். புரசைவாக்கம் தாணா தெருவில் பழ வியாபாரம் செய்து கொண்டிருந்த அவர், 13—3—1982 சனிக்கிழமை காலை 11-45 மணிக்கு கைது செய்யப்பட்டு, 2 நாள் வேப்பேரி காவல் நிலையத்தில் வைத்திருந்ததாகவும், பிறகு திங்கட்கிழமை